தினமணி

## களக்காடு மலையடிவாரத்தில் யானைகள் மீண்டும் அட்டகாசம்: வாழைகள் சேதம்

First Published : 01 Mar 2011 02:27:37 PM IST

களக்காடு, பிப். 28: திருநெல்வேலி மாவட்டம், களக்காடு மலையடிவாரத்தில் உள்ள வாழைத் தோட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை இரவு காட்டு யானைகள் கூட்டமாகப் புகுந்து அங்கிருந்த வாழை மரங்களைச் சேதப்படுத்தின.

களக்காடு மலையடிவாரத்தில் உள்ள புலவன்குடியிருப்பு, பூதத்தான்குடியிருப்பு கிராம விவசாயிகளுக்குச் சொந்தமான விவசாயத் தோட்டங்கள் மலையடிவாரத்தை ஒட்டி அமைந்துள்ளன. இத் தோட்டங்களில் கடந்த 3 மாதங்களாக காட்டு யானைகள் கூட்டமாகப் புகுந்து வாழை, தென்னை, பனைமரங்களைச் சேதப்படுத்தி வந்தன.

இதனால் விவசாயிகள் பெரிதும் சிரமத்துக்கு உள்ளாயினர். கடந்த சில வாரங்களாக காட்டு யானைகள் அடர்ந்த காட்டுப் பகுதிக்குள் சென்றதால் பயிர்ச்சேதம் தவிர்க்கப்பட்டது.

இந்நிலையில், கடந்த சில தினங்களாக களக்காடு சிவபுரம், கள்ளியாறு பகுதியில் உள்ள வாழைத் தோட்டங்களுக்குள் காட்டு யானைகள் கூட்டமாகப் புகுந்து நூற்றுக்கணக்கான வாழைகளைச் சேதப்படுத்தியுள்ளன.

மூங்கிலடியைச் சேர்ந்த இசக்கிமுத்து என்பவரின் வாழைத் தோட்டத்துக்குள் ஞாயிற்றுக்கிழமை இரவு புகுந்த யானைகள், 50-க்கும் மேற்பட்ட குலைதள்ளிய வாழைகளைச் சேதப்படுத்தியுள்ளன.

சிவபுரம், கள்ளியாறு பகுதிகளில் கடந்த சில தினங்களாக காட்டுயானைகள் இரவு நேரங்களில் உலா வருவதால் வனத் துறையினர் அங்கு முகாமிட்டு யானைகளைக் காட்டுக்குள் விரட்ட வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## தேனி மாவட்டத்தில் நெல் கொள்முதல் நிலையம்: விவசாயிகள் வலியுறுத்தல்

First Published : 01 Mar 2011 10:51:24 AM IST

தேனி, பிப். 28:÷தேனி மாவட்டத்தில் நெல் கொள்முதல் நிலையங்களை அமைப்பதற்கு மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பெரியகுளம், போடி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

பெரியகுளம், போடி ஆகிய வட்டாரங்களில் 3,000 ஏக்கர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்பட்டு, இப்போது அறுவடை நடந்து வருகிறது. கடந்த சில நாள்களுக்கு முன்பு வரை விவசாயிகளிடம் இருந்து 60 கிலோ எடையுள்ள நெல் மூட்டை ரூ.600-க்கு கொள்முதல் செய்யப்பட்டு வந்தது. அறுவடைப் பணிகள் மும்முரமாக நடந்து வரும் நிலையில், வியாபாரிகள் நெல் கொள்முதல் செய்வதைத் தாமதப்படுத்தி, 60 கிலோ மூடையை ரூ.530-க்கு கொள்முதல் செய்வதாகக் கூறப்படுகிறது.

÷இதனால் போடி, முந்தல், பெரியகுளம் ஆகிய பகுதிகளில் அறுவடை செய்த நெல்லை விற்க முடியாமல் விவசாயிகள் களத்தில் குவித்து வைத்துள்ளனர்.÷எனவே, அரசு அறிவித்துள்ளபடி குவிண்டால் ஒன்றுக்கு சன்ன ரகம் ரூ.1,125-க்கும், மோட்டா ரகம் ரூ.1,650-க்கும் விலை நிர்ணயம் செய்து, நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நெல் கொள்முதல் நிலையம் அமைக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

**தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்க அலுவலக புதிய கட்டடம் திறப்பு**

First Published : 01 Mar 2011 11:08:01 AM IST

பெரம்பலூர், பிப். 28: பெரம்பலூர் அருகேயுள்ள கீழக்கரை ஊராட்சி எசனை கிராமத்தில் வேளாண் கூட்டுறவு கடன் சங்க அலுவலக புதிய கட்டடம் திறப்பு விழா ஞாயிற்றுகிழமை நடைபெற்றது.

விழாவில், ரூ. 14.76 லட்சத்தில் கட்டப்பட்ட புதிய கட்டடத்தை திறந்துவைத்து, வேளாண் துறை மூலம் 5 நபர்களுக்கு விவசாயத்துக்கான இடுபொருள்களை வழங்கி மாவட்ட ஆட்சியர் மா. விஜயகுமார் பேசியது:

கூட்டுறவே நாட்டுயர்வு என்பதற்கிணங்க, அனைத்து மக்களும் ஒற்றுமையாக உழைத்தால் நாடு வளர்ச்சி பெறும். எசனை கிராமத்தில் இப்போது தொடங்கப்பட்டுள்ள புதிய வேளாண் கூட்டுறவு கடன் சங்க நவீன அலுவலகத்தில் விரைவில் சங்க கணக்குகள் அனைத்தும் கணினிமயமாக்கப்படவுள்ளது. இதை கிராம மக்கள் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார் அவர்.

பெரம்பலூர் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் ம. ராஜ்குமார் பேசியது:

தமிழக முதல்வர், பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு 1 ரூபாய்க்கு 1 கிலோ அரிசி வழங்கும் திட்டம், இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம், உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம், கலைஞர் வீடு வழங்கும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளார்.

குறிப்பாக, விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, ரூ. 7 ஆயிரம் கோடி கூட்டுறவு கடன் தள்ளுபடி செய்துள்ளதோடு, விவசாயத்துக்கு இலவச மின்சாரம் வழங்கியுள்ளார். இந்தத் திட்டங்கள் அனைத்தையும் பொதுமக்கள் முழுமையாகப் பயன்படுத்திக்கொண்டு தங்கள் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார் அவர்.

விழாவில், பெரம்பலூர் ஒன்றியக் குழுத் தலைவர் க. பெரியசாமி, வேளாண்மை இணை இயக்குநர் சி. சிவகுமார், சட்டப்பேரவை முன்னாள் உறுப்பினர் பா. துரைசாமி, ஊராட்சித் தலைவர்கள் முத்துசாமி (எசனை), ப. சிவலிங்கம் (கீழக்கரை), ரா. வெங்கடாசலம் (வடக்குமாதவி), கட்டடக் குழுத் தலைவர் சி. ஆறுமுகம், கூட்டுறவுத் துறை துணைப் பதிவாளர் மு. கந்தசாமி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

தினமலர்

**மதுரை கருப்பாயூரணியில் ""பழம் நழுவி பாலில் விழுந்த" அனுபவம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 02,2011,00:00 IST




இந்த வருடம் மதுரை விவசாயிகள் நெல் அறுவடையில் நல்ல மகசூல் எடுத்து மகிழ்ச்சியாக இருக்கின்றனர். இந்த விவசாயிகளுக்கு உதவும் வகையில் தினமலர் விவசாயமலரில் சாகுபடி முறைகளை தெரிவித்து வருகின்றது. மதுரை தினமலர் ராஜராஜன் 1000 நவீன நெல் சாகுபடி முறை பற்றிய விவரங்கள் கொடுத்து வருகின்றது. மேலும் விவசாயிகள் சாகுபடி செய்வதற்கேற்ற ரகங்களில் பெருவெட்டு நெல் ரகமான அம்பை-16 என்ற நெல் ரகத்தையும் சிபாரிசு செய்திருந்தது. இந்த ரகம் ஆடுதுறை 31 மற்றும் கோ 39 ஆகிய இரண்டு ரகங்களையும் கருவொட்டு சேர்த்து

அம்பை 16 என்ற பெயரில் அம்பாசமுத்திரம் பண்ணையில் 1986ம் ஆண்டு வெளியிடப்பட்ட ரகம். இந்த ரகம் எக்டருக்கு 120 கிலோ வரை தழைச்சத்தை ஏற்கும் திறன் படைத்தது. அரவையின்போது அரிசி காணும் திறன் 71 சதவீதம் ஆகும். இந்த அரிசியில் 10.25 சதவீத புரதச்சத்து உள்ளது. இந்த சத்து மற்ற குறுகிய கால ரகங்களைவிட (டி, கே.எம்.6 (6.9%), ஆடுதுறை 36 (8.53%) அதிகமாகும். சோறு மற்றும் பலகாரங்கள் செய்வதற்கு ஏற்றது. இந்த ரகத்தில் எக்டருக்கு 8 டன் மகசூல் கொடுக்கின்றது. அணைக்கட்டு பாசனம் உள்ள பகுதியில் சாகுபடி செய்யப் படுகின்றது. நெல்லினை கேரள வியாபாரிகள் நல்ல விலை கொடுத்து வாங்குகின்றனர். மதுரை பகுதியில் மூடைக்கு விலை ரூ.720 கிடைக்கின்றது (மூடை 66 கிலோ).

மதுரை கருப்பாயூரணியில் விவசாயி எ.சங்கநாடார் பெயரில் எ.எஸ். விவசாயப்பண்ணை உள்ளது. இப்பண்ணை நல்ல நிர்வாகத்தில் செயல்பட்டு வருகின்றது. எப்போதும் இப் பண்ணையில் புதிய முறையில் நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றது. இந்த வருடம் எ.எஸ். விவசாய பண்ணையில் ஏ.எஸ்.டி.16 நெல் ரகம் சுமார் 27 ஏக்கர் பரப்பில் அம்பை 16 ரகம் சாகுபடி செய்யப்பட்டிருந்தது. மேலும் பண்ணை நிர்வாகத்தினர் அம்பை 16 ரகத்தை ராஜராஜன் 1000 நவீன நெல் சாகுபடி முறையில் மிகவும் கவனமாக சாகுபடி செய்திருந்தனர். இந்தப்பயிர் பரந்த அளவில் சாகுபடி செய்யப் பட்டிருந்தது. நிர்வாகத்தினர்கள் அம்பை16 ரகத்தில் ஏக்கரில் 47 மூடை (மூடை 66 கிலோ) மகசூல் எடுத்தனர். இப்பண்ணையில் பயிர் செய்ய ஒரு ஏக்கருக்கு செலவு ரூ.12,000 ஏற்பட்டுள்ளது. 47 மூடை நெல்லின் விலை (47 து ரூ.720) ரூ.33,840. ஏக்கர் சாகுபடி செலவு ரூ.12,000. செலவு போக தொகை ரூ.21,840. வைக்கோல்வரவு ரூ.500. மொத்த வரவு ரூ.22,340. இந்த அளவு லாபம் பெற்றதற்கு இப்பண்ணை நிர்வாகத்தினர்களே காரணம். இந்த சாதனையை இவர்கள் ""பழம் நழுவி பாலில் விழுந்த" அனுபவம் என்கிறார்கள். இந்த அனுபவத்திற்கு இரண்டு நுட்பங்கள் உதவியுள்ளது. 1. உயர் விளைச்சல் ரகம், 2. ராஜராஜன் 1000 நவீன நெல் சாகுபடி முறை. இந்த வருடம் கலெக்டர் நவீன நெல் சாகுபடி முறையை அனுசரித்தவர்களை பாராட்டிஉள்ளார். அதுபோல் மூத்த விவசாய இலாகா அதிகாரிகளும் பாராட்டியுள்ளனர். பாராட்டு பெற்றவர்களில் ஏ.எஸ். விவசாய பண்ணையை சேர்ந்தவர்களும் அடங்குவர்.-எஸ்.எஸ்.நாகராஜன்

**நெற்பயிரில் குருத்துப்பூச்சி மேலாண்மை**

பதிவு செய்த நாள் : மார்ச் 02,2011,00:00 IST

**சேத அறிகுறிகள்:** பெரும்பாலான இடங்களில் இப்பூச்சியின் சேதம் நாற்றங்காலிலேயே துவங்குகின்றது. இப்பூச்சி நடவு செய்த இளம் பயிரிலும், கதிர் பிடிக்கும் பருவத்திலும் சேதங்களை

உண்டாக்குகின்றது. அந்துப்பூச்சிகள் இலைகளின் மேல் பகுதியில் முட்டைகளைக் குவியலாக இடும். முட்டைகளில் இருந்து வெளிவரும் புழுக்கள் இளம்பயிரின் தண்டில் துளையிட்டு உட்சென்று அதன் அடிப்பாகத்தில் இருந்து கொண்டு உட்பகுதியைக் கடித்து உண்பதால் இளம்பயிரின் நடுக்குருத்து வாடிக் காய்ந்து விடும். சாதாரணமாக ஒரு தூருக்கு ஒரு புழு மட்டும் இருக்கும். இவ்வாறு தாக்கப்பட்ட பயிரின் வளர்ச்சி குன்றி தூர்களின் எண்ணிக்கையும் வெகுவாகக் குறையும். மேலும் தொடர்ந்து புழு நெற்பயிரை கதிர் பிடிக்கும் பருவத்தில் தாக்கும்போது வெளிவரும் கதிரில் மணிகள் பால் பிடிக்காமல் சாவியாகி வெண் கதிர்களாக மாறுகின்றன. இதனால் மகசூல் பெரிதும் பாதிக்கப்படுகிறது. இவ்வாறு வாடிய நடுக்குருத்தையும், வெண் கதிரையும் தூரிலிருந்து எளிதில் எடுத்து விடலாம். பாதிக்கப்பட்ட தண்டின் அடிப் பகுதியில் துவாரமும், புழுவின் எச்சமும் காணப்படும். இப்புழுக்கள் பயிரின் தூர்கட்டும் பருவத்தில் நடுக்குருத்து வாடல் மற்றும் கதிர்வரும் தருணத்தில் வெண்கதிர் போன்ற சேத அறிகுறிகளை ஏற்படுத்துகின்றன.

**பொருளாதார சேதநிலை:** இளம் பயிரில் சதுர மீட்டருக்கு 2 முட்டைக்குவியல்கள் அல்லது பயிர் வளர்ச்சிக் காலத்தில் 10 விழுக்காடு தூர்களில் நடுக்குருத்து வாடி இருத்தல் மற்றும் மணி பிடிக்கும் பருவத்தில் 2 விழுக்காடு வெண் கதிர்கள் தோன்றுதல் போன்ற அறிகுறிகள் இதன் பொருளாதார சேதநிலைக்கு ஒரு அளவுகோலாகும்.

**மேலாண்மை முறைகள்:** அறுவடை செய்தபின் தாள்களை மடக்கி உழுவதன் மூலம் புழுக்களையும், கூட்டுப்புழுக்களையும் அழிக்கலாம். * நடவு செய்யும் பொழுது வாடிய நடுக்குருத்து உடைய நாற்றுகளைத் தவிர்க்க வேண்டும்.* சிபாரிசு செய்யப்பட்ட அளவிற்கு மேல் தழைச்சத்து உரங்கள் இடுவது கூடாது. * ஏனைய பூச்சிகள் போன்று இப்பூச்சியும் இரவு நேரங்களில் விளக்குப் பொறிகளுக்கு ஈர்க்கப்படுவதால் அந்துப் பூச்சிகளை எளிதில் அழிக்கலாம். மேலும் விளக்குப் பொறி மூலம் இப்பூச்சியின் எண்ணிக்கை மற்றும் நடமாட்டத்தையும் கணக்கிடலாம். விளக்குப் பொறியின் அடியில் ஒரு தட்டில் மண்ணெண்ணெய் கலந்த நீர் வைத்தால் வெளிச்சத்திற்கு கவரப்படும் அந்துப்பூச்சிகள் நீரின்மேல் விழுந்து அழிகின்றன. நாற்றங்காலுக்கு அருகில் விளக்குப்பொறியை வைக்கக்கூடாது. ஐந்து ஏக்கருக்கு ஒரு விளக்குப்பொறி போதுமானது.

* இப்பூச்சியின் தாக்குதலைத் தாங்கி வளரக் கூடிய ஐ.ஆர்.8, 20, 26, 36, 40 மற்றும் 56 போன்ற நெல் ரகங்களைப் பயிரிடலாம்.

* எக்டருக்கு டிரைகோகிரம்மா ஜப்பானிக்கம் ஒட்டுண்ணியை 5 சி.சி. என்ற அளவில் நாற்று நட்ட பிறகு 15 நாட்கள் முதல் வாரம் ஒரு முறை நான்கு வாரத்திற்கு வயலில் கட்டி குருத்துப் பூச்சியின் முட்டைகளை அழிக்கலாம்.

* பூச்சி தாக்குதல் அல்லது முட்டை குவியல்கள் பொருளாதார சேத நிலையைத் தாண்டும்போது ஒரு ஏக்கருக்கு மோனோ குரோட்டோபாஸ் 400 மி.லி. அல்லது புரொபெனோபாஸ் 400 மி.லி.

என்ற அளவில் தெளித்து கட்டுப்படுத்தலாம்.**சு.இருளாண்டி மற்றும் க.இறைவன்,வேளாண்மை அறிவியல் நிலையம்,பேச்சிப்பாறை, கன்னியாகுமரி-629 161.**

**சின்னச்சின்ன செய்திகள்**

பதிவு செய்த நாள் : மார்ச் 02,2011,00:00 IST



**மரப்பயிர்களில்களை எடுக்க ஒரு இயந்திரம்:** 150 குதிரைத்திறன் கொண்ட டிராக்டரில் பின்புறம் உள்ள ரப்பர் டயர் சக்கரங்களுக்கு பதிலாக இதற்கென வடிவமைக்கப் பட்ட இரண்டு இரும்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்டுள்ளது. இதற்கென ஆகும் செலவு ரூ.17,000/-. சுழற் கலப்பையை டிராக்டருடன் இணைக்கப்பட்டு அகன்ற வரிசைப் பயிர்களில் களை எடுக்கப்படுகிறது. இந்த தொழில்நுட்பத்தால் மணிக்கு அரை ஏக்கர் என்ற அளவில் களை எடுக்கலாம். இதற்காக ஆகும் செலவு எக்டருக்கு ரூ.2000/-. இதற்கு டிராக்டரை இயக்க ஒருவரும், மரங்களைச் சுற்றி களை எடுக்க இரு வேலை யாட்களும் போதுமானது. ஆட்களைக் கொண்டு களை எடுக்க எக்டர் ஒன்றுக்கு ரூ.5000/- செலவாகிறது. அகன்ற வரிசைப் பயிர்கள் இரு பக்கங்களிலும் வரிசைகளில் நடப்படும் போது இந்த இயந்திரம் இரு திசைகளிலும் களை எடுக்க பெரிதும் பயன்படும். டிராக்டர் சுழற் கலப்பையால்களை எடுக்கும் போதுகளைச் செடிகள் நன்கு தூளாக்கப்பட்டு மண்ணுடன் கலந்துவிடுகின்றன. இந்த இயந்திரத்தைப் பயன்படுத்தும் போது தைலமரத்தில் தற்போதைய மரம் நடும் முறையில் உள்ள வரிசைக்கு வரிசை 3 மீட்டர் என்ற இடைவெளிக்கு பதிலாக 2 மீட்டர் இடை வெளியே போதுமானது. இவ்வாறு மரப்பயிர்களின் எண்ணிக்கையைக் கூட்டுவதன் மூலம் எக்டர் ஒன்றுக்கு ரூ.22,500/- அதிக வருமானம் ஈட்டமுடியும். (தகவல்: அ.தாஜுதீன், பூ.மாசிலாமணி, சி.திவாகர் துரைராஜ், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி

மற்றும் ஆராய்ச்சி நிலையம், த.வே.பல்கலைக்கழகம், குமுளூர்-621 712. திருச்சி. 0431-320 2300)

**ஏலக்காய் அலசும் இயந்திரம்:** ஏலக்காயின் தரத்தை நிர்ணயிக்கும் முக்கியமான காரணி அதன் கிளிப்பச்சை நிறமாகும். இதற்கு உரிய பருவத்தில் அறுவடை செய்வது, காய் அலசுவது, அதன் ஈரப்பதத்தை குறைக்க ஏல விவசாயிகளின் மொழியில் சொல்வதானால் ஸ்டோரில் போட்டு உலர்த்துவது.
இடுக்கி மாவட்டத்தில் புளிய மலையில் வீட்டில் வசிப்பவரின் தொழில்நுட்ப புத்தியில் உருவாக்கப்பட்டிருக்கும் ஏலக்காய் அலசும் இயந்திரம். இந்த இயந்திரம் சுமார் 100 கிலோ கொள்திறன் கொண்டது. சிலிண்டர் வடிவில் உள்ளது. 90 செ.மீ. நீளமும் 60 செ.மீ. விட்டமும் கொண்டது. 15 எச்.பி. திறனுள்ள மின்சார மோட்டாரால் இயங்கும், அலச வேண்டிய காயை உள்ளே போடவும். அலசி முடிந்தவுடன் வெளியே எடுக்கவும் வசதி கொடுக்கப்பட்டுள்ளது. ஒரு நிமிடத்தில் 45 முறை சுழலும் விதத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் காய்கள் உடைபடாமல் பாதுகாக்கப்படுகிறது. தேவையான தண்ணீரை மட்டும் நிரப்பி காயை அலசும் வேலை 30 நொடிகளில் நிறைவு பெறுகிறது. இதோ மிகச்சுத்தமாக அலசப்பட்ட ஏலக்காய் சேகரிக்கப் படுகிறது. இதற்கெல்லாம் மொத்தத்தில் 25 லிட்டர் தண்ணீர் போதுமாகிறது. ஒரு நாளில் சுமார் 8 முதல் 10 டன் ஏலக்காயை அலசி எடுக்க முடிகிறது. இதனை இயக்க ஒரு ஆள் போதுமானது. ஏலக்காயை பதப்படுத்த - அலசுதல் உட்பட ஒரு கிலோவுக்கு ரூ.7/- ஆவதாகக் கணக்கிடப் பட்டுள்ளது. இந்த இயந்திரத்தின் விலை ரூ.30,000/-. பதப்படுத்தும் நிலையங்களை வைத்து செயல்படுபவர்களுக்கு இந்த எந்திரம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். ஒவ்வொரு தனி மனிதர் கொண்டுவரும் காயையும் தனிப்பட்ட முறையில் சிக்கனமான முறையில் அலசித்தர இயலும். (தகவல்: ஜான்ஜோ வர்க்கீஸ், மனோஜ் ஷம்மன், கே.எம்.குருவில்லா, ஜே.தாமஸ், இந்திய ஏலக்காய் ஆராய்ச்சி நிலையம், ஸ்பைசஸ் போர்டு, மயிலாடும்பாறை)
-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

**நெல்லில் செம்பேன் ஒருங்கிணைந்த கட்டுப்பாடு**

பதிவு செய்த நாள் : மார்ச் 02,2011,00:00 IST

தற்போது பயிரிடப்பட்டுவரும் பல்வேறு ரக நெற்பயிர்களில் செம்பேன் தாக்குதல் அதிகம் தென்பட்டு வருகிறது. இச்செம்பேன்கள் கண்களுக்கு தெளிவாகப் புலப்படாது. அதாவது ஒரு மி.மீ. அளவிற்கும் சிறியவை. சாதாரண கை உருப்பெருக்கிகள் கொண்டுதான் நன்றாக பார்க்க முடியும்.
எட்டுக்கால்களைக் கொண்ட சிலந்திவகையைச் சேர்ந்த இந்த நுண்ணிய செம்பேன்கள்

நெற்பயிரில் இலைகளின் அடிப்புறத்தில் இருந்து சாற்றை உறிஞ்சுவதால் இலைகளின் மேற்பரப்பில் பழுப்பு, மஞ்சள் மற்றும் வெள்ளை நிறத்தில் புள்ளிகளும் மெல்லிய வரிகளும் ஏற்பட்டு நாளடைவில் இலைகள் வெளிறி கருகிவிடும். அதிக எண்ணிக்கையில் பெருகும்போது இலையின் மேற்பரப்பிற்கும் வந்து சாற்றை உறிஞ்சி மிகுந்த அளவில் சேதம் ஏற்படுத்துகிறது. நாற்றங்கால்களிலும் நடவு வயலிலும் இதன் பாதிப்பால் 25 சதம் வரை மகசூல் இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. வெப்பமான மழைக் காலத்தை ஒட்டி இதன் தாக்குதல் அதிகம் தென்படும். தாய்ச்செம்பேன்கள் தனித்தனி முட்டைகளை இலைகளின் நடுநரம்புகளை ஒட்டி இருபுறங்களிலும் இடுகின்றன. மென்மையான பட்டு இழைகள் போல் வலைகள் பின்னி 200 முட்டைகள் வரை இடுகின்றன. குஞ்சுகள் 6 கால்களுடன் இளம்பழுப்பு நிறத்திலும் முதிர்ந்த செம்பேன்கள் 8 கால்களுடன் மஞ்சள் கலந்த பச்சை நிறத்திலும் காணப்படும்.

தாய்செம்பேன்கள் 21 நாட்கள் வரை உயிர்வாழும். உடம்பின் இரு ஓரங்களிலும் சிறு கருப்பு புள்ளிகளுடன் காணப்படும்.
வயற்பரப்பில் அதிகமான ஈரப்பதமும் வெப்பமும் இருத்தல், நெருக்கமான நடவு, போதுமான காற்றோட்டமும் சூரிய வெளிச்சமும் இல்லாதது, களைகள் மண்டிக் கிடப்பது, தேவையில்லாமலும் தேவைக்கு அதிகமாகவும் விஷப்பூச்சி மருந்துகளைத் தெளித்து இயற்கை எதிரிகளை அழிப்பது போன்றவை இந்த நெற்செம்பேன்களின் அதிவேகமான இனப்பெருக்கத்திற்கு முக்கிய காரணங்களாகும். எனவே இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டும். இவற்றுடன் கீழக்காணும் ஒருங்கிணைந்த மேலாண்மை முறைகளையும் கடைபிடித்து சிறந்த முறையில் கட்டுப்படுத்தலாம்.
மேலாண்மை முறைகள்: தி சூடோமோனாஸ் புளூரசன்ஸ் என்ற பூஞ்சாணத்தை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் கலந்து விதை நேர்த்தி செய்து விதைப்பதால் செம்பேன் தாக்குதலைத் தவிர்க்கலாம்.

* வயலில் களைகளை அகற்ற வேண்டும்.
* செம்பேன்கள் பாதித்த பாகங்களை சேகரித்து அழித்தல் வேண்டும்.
* எதிர்ப்புத்திறன் உள்ள நெல் ரகங்களைக் கண்டறிந்து பயிர்செய்ய வேண்டும்.
* தழைச்சத்து அதிகம் இடுவதைத் தவிர்க்கவும்.
* தழைச்சத்தை யூரியா வடிவில் வேப்பம் புண்ணாக்குடன் 5:1 என்ற விகிதத்தில் கலந்து இடவேண்டும்.
* தொடர்ந்து நெல் சாகுபடி செய்யாமல் பயிர் சுழற்சி முறைகளைப் பின்பற்ற வேண்டும்.
* செம்மை நெல் சாகுபடி முறைகளைப் பின்பற்றும்போது பொதுவாக செம்பேன் மற்றும் இதர பூச்சிகளின் தாக்குதல் மிகக்குறைவாக உள்ளது.
* செம்பேன்களின் எண்ணிக்கை இலைக்கு 10 என்று மிகும்பொழுது நனையும் கந்தகம்

80 சதம் @ 6.25 கிராம்/ லி, புரபெனோபாஸ் @ 2மிலி/லி, ஸ்பைரோமெசிபென் @ 0.75 மிலி/லி அல்லது 3 சத வேப்பெண்ணெய் கரைசல், 5 சதம் வேப்பம் பருப்புச்சாறு போன்றவற்றைத் தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

* பூச்சி மருந்து தெளிக்கும்போது தவறாது ஒட்டும் திரவம் 0.5 மிலி/லி என்ற அளவில் சேர்க்க வேண்டும்.

ஜெ.ஜெயராஜ், சி.சின்னையா மற்றும் எஸ்.மணிசேகரன்,
வேளாண் பூச்சியியல் துறை,
வேளாண்மைக் கல்லூரி மற்றும்
ஆராய்ச்சி நிலையம்,
மதுரை-625 104.

**விதை கரும்பு வழங்க ரூ.6.40 கோடி ஒதுக்கீடு: விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : மார்ச் 02,2011,01:50 IST

மதுராந்தகம்: மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை கரும்பு விவசாயிகளுக்கு இலவசமாக விதைக் கரும்பு வழங்க, 6 கோடியே 40 லட்ச ரூபாய் வழங்கி அரசு உத்தரவிட்டுள்ளது.மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை படாளம் கிராமத்தில் அமைந்துள்ளது. செங்கல்பட்டு அடுத்த பழையசீவரம் கிராமத்தில் தனியார் சர்க்கரை ஆலை துவங்கியதால், மதுராந்தகம் ஆலைக்கு கரும்பு பற்றாக்குறை ஏற்பட்டது. 2002ம் ஆண்டு ஆலை மூடப்பட்டது. தொழிலாளர்கள் மற்றும் கரும்பு விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். பல ஆண்டுகளாக ஆலை மூடியே இருந்ததால் சீரழிந்தது. விவசாயிகள் மற்றும் அரசியல் கட்சி பிரமுகர்கள் ஆலையை புனரமைத்து இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரசிடம் வலியுறுத்தினர். அதை ஏற்று, கடந்த ஆண்டு அக்டோபர் 15ம் தேதி, துணை முதல்வர் ஸ்டாலின் ஆலை புனரமைப்புப் பணியை துவக்கி வைத்தார். மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை கரும்பு உற்பத்தியாளர்கள் சங்கம், கரும்பு விவசாயிகளுக்கு விதைக் கரும்பு இலவசமாக வழங்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தது. அதை ஏற்று, மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை கரும்பு விவசாயிகளுக்கு மட்டும், ஒரு முறை இலவசமாக விதைக் கரும்பு வழங்க முதல்வர் உத்தரவிட்டார். அதன்படி, விதைக்கரும்பு வழங்க 6 கோடியே 40 லட்ச ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கி, வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் முதன்மை செயலர் ராமமோகனராவ் உத்தவிட்டுள்ளார். இந்த அறிவிப்பு, விவசாயிகள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

**விவசாயிகளுக்கு விழிப்புணர்வு பயிற்சி**

பதிவு செய்த நாள் : மார்ச் 02,2011,01:55 IST

திரூர்:திருவள்ளூர் அடுத்துள்ள திரூர் வேளாண்மை அறிவியல் மற்றும் நெல் ஆராய்ச்சி நிலையத்தில், விவசாயிகளுக்கான வேளாண் விழிப்புணர்வு பயிற்சி முகாம் நடை பெற்றது. திருவள்ளூர் மாவட்டத்தில் இயற்கை வளங்கள், நவீன தொழில் நுட்ப முறைகள் மற்றும் பாசன திட்டங்களை முறையாக பயன்படுத்தி விவசாய உற்பத்தியை பெருக்க நீர் வள, நில வள திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் சோழவரம், பூண்டி உள்ளிட்ட வட்டங்களைச் விவசாயிகளுக்கு பயிர் சாகுபடி மற்றும் பாசன திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு பயிற்சி முகாம் திரூர் வேளாண் அறிவியல் நிலைய வளாகத்தில் நடந்தது. எண்ணெய் வித்துப் பயிர்களுக்கு தெளிப்பு நீர் பாசனம் அமைத்தல், தோட்டக்கலை பயிர்களுக்கு சொட்டுநீர் பாசனம் அமைத்தல் மற்றும் வேளாண் இயந்திரங்கள் குறித்த, பயிற்சிகளை விவசாயிகளுக்கு வேளாண் விஞ்ஞானிகள் வழங்கினர். பூண்டி வட்டத்தைச் சேர்ந்த அம்மம்பாக்கம், எடம்பேடு, கலவை, கச்சூர், அத்திலிவாக்கம் உட்பட, பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் முகாமில் பங்கேற்றனர்.

**பனை வெல்லம் விலை வீழ்ச்சிஉற்பத்தியாளர்கள் கடும் விரக்தி**

பதிவு செய்த நாள் : மார்ச் 02,2011,03:36 IST

நங்கவள்ளி: விலைவாசி உயர்ந்துள்ள நிலையில், கடந்த ஆண்டை விட நடப்பாண்டில் பனை வெல்லம் விலை வீழ்ச்சியடைந்துள்ளது உற்பத்தியாளர்களை வேதனையில் ஆழ்த்தியுள்ளது.மேட்டூர் தாலுகா, நங்கவள்ளி, ஜலகண்டபுரம், தாரமங்கலம் சுற்றுப்பகுதியில் பனை மரங்கள் அதிக அளவில் உள்ளது. கோடைகாலம் துவங்கியவுடன் பனையில் உருவாகும் பதநீரை எடுத்து உற்பத்தியாளர்கள் வெல்லம் தயாரித்து விற்பனை செய்வது வழக்கம்.ஏராளமான தொழிலாளர்கள் வெல்லம் தயாரிப்பதை குடிசை தொழிலாக செய்கின்றனர். நங்கவள்ளி பகுதியில் தயார் செய்யப்படும் பனைவெல்லத்தை வியாபாரிகள் மொத்தமாக வாங்கி சேலத்தில் இருந்து பிறமாவட்டங்களுக்கு விற்பனைக்கு அனுப்புகின்றனர்.கடந்த ஆண்டு ஒரு கிலோ பனைவெல்லம், 55 ரூபாய்க்கு விற்றது. நடப்பாண்டில் விலைவாசி உயர்ந்தபோதிலும், பனைவெல்லம் ஒரு கிலோ 31 ரூபாயாக விலை வீழ்ச்சியடைந்துள்ளது. கடந்தை ஆண்டை விட நடப்பாண்டு பனை வெல்லம் கிலோவுக்கு 24 ரூபாய் வரை விலை வீழ்ச்சியடைந்துள்ளது உற்பத்தியாளர்களை வேதனையில் ஆழ்த்தியுள்ளது.

**தக்காளி விலை கடும் வீழ்ச்சி : கி.கிரி மாவட்ட விவசாயிகள் கலக்கம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 02,2011,00:44 IST

ஓசூர்: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தக்காளி விலை கிலோ 2 ரூபாய்க்கு வீழ்ச்சியடைந்துள்ளதால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். விற்பனைக்கு கொண்டு வந்த தக்காளி விற்பனையாகாததால் சாலையோரம் கொட்டி செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தமிழகத்தில் அதிகளவு காய்கறிகள் உற்பத்தி செய்யப்படுகிறது. இங்கு மாவுக்கு அடுத்தப்படியாக அனைத்து பருவத்திலும் காய்கறி சாகுபடி செய்யப்படுகிறது. மாவட்டத்தில் 10,773 ஹெக்டேரில் விவசாயிகள் காய்கறி சாகுபடி செய்கின்றனர்.

இவற்றில் தக்காளி மட்டும் 6,000 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்படுகிறது. ஓசூர், தேன்கனிக்கோட்டை தாலுகாவில் ஆண்டு முழுவதும் விவசாயிகள் தக்காளி உற்பத்தி செய்து தமிழகத்தின் பிற மாவட்டங்களுக்கும், வெளிமாநிலங்களுக்கும் பல ஆயிரம் டன் ஏற்றுமதி செய்கின்றனர். குறிப்பாக ஓசூர் அடுத்த ராயக்கோட்டையில் தமிழகத்தில் மிகப்பெரிய தக்காளி சந்தை உள்ளது. இங்கு வெளியூர் வியாபாரிகள் தினம் வந்து, விவசாயிகள் கொண்டு வரும் தக்காளிகளை நேரடியாக கொள்முதல் செய்து செல்கின்றனர். அதற்கு அடுத்து ஓசூர் பத்தலப்பள்ளி மார்க்கெட்டில் இருந்து கர்நாடகா, ஆந்திரா மற்றும் தென்மாவட்டங்களுக்கு அதிகளவு தக்காளி ஏற்றுமதியாகிறது. ஓசூர், பாகலூர், பேரிகை, சூளகிரி, ராயக்கோட்டை, உத்தனப்பள்ளி, கெலமங்கலம் மற்றும் தேன்கனிக்கோட்டை பகுதியில் விவசாயிகள் சொட்டு நீர் பாசனம் முறையிலும், பந்தல் அமைத்து நவீன தொழில்நுட்ப முறையில் விவசாயிகள் நாட்டு தக்காளி மற்றும் வீரிய ஒட்டு ரக தக்காளிகளை உற்பத்தி செய்கின்றனர்.

கடந்த ஒரு மாதத்துக்கு முன் வரை தக்காளி, வெங்காயத்துக்கு போட்டியாக கிலோ 60 வரை விற்பனையானது. தொடர் மழை, பனி காற்று, மூடுபனி ஆகியவற்றால் தக்காளி செடிகள் பட்டும், கருகியும் உற்பத்தி குறைந்தது. இதனால், உள்ளூர், வெளியூர் சந்தைகளில் தக்காளி விலை "கிடுகிடு'வென உயர்ந்தது. கடந்த மூன்று நாட்களாக தக்காளி விலை திடீரென கடும் வீழ்ச்சியடைந்துள்ளது. கடந்த இரு மாதம் 25 கிலோ தக்காளி 1,200 ரூபாய்க்கு விற்பனையானது. தற்போது கிலோ 2 ரூபாய் அடிப்படையில் வெறும் 50 ரூபாய் விற்பனையாகிறது. ஓசூர் உழவர்சந்தையில் நேற்று ஒரு கிலோ தக்காளி 3 ரூபாய்க்கு விற்பனையானது. மற்ற மார்க்கெட்டுகளில் கிலோ 2 ரூபாய்க்கு வியாபாரிகள் கூவி, கூவி விற்பனை செய்தனர். விற்பனையாகாத தக்காளிகளை விவசாயிகள், வியாபாரிகள் சாலையோரங்களில் கொட்டி சென்றனர். ஆடு, மாடுகள் அவற்றை தின்றன.

நேற்று ஓசூர் பத்தலப்பள்ளி மற்றும் உழவர்சந்தைக்கு தக்காளியை விற்பனைக்கு கொண்டு வந்த விவசாயிகள், அவற்றை கிருஷ்ணகிரி பை-பாஸ் சாலையில் கொட்டி சென்றனர். போக்குவரத்து செலவு, கூலி ஆட்களுக்கு கூட தக்காளி விற்பனையில் விலை கிடைக்காததால், பேரிகை, பாகலூர், உத்தனப்பள்ளி, சூளகிரி பகுதியில் விவசாயிகள் செடிகளில் தக்காளியை பறிக்காமல் கிடப்பில் போட்டு விட்டனர்.
ஓசூர் தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் கூறியதாவது: கடந்த ஆறு மாதமாக தக்காளி உற்பத்தி மிக குறைவாக இருந்தது. அதனால், விலை உயர்ந்தது. தற்போது கர்நாடகா, ஆந்திரா மட்டுமின்றி கிருஷ்ணகிரி மாவட்டத்திலும் விளைச்சல் அதிகமாகியுள்ளதால், தக்காளி விலை வீழ்ச்சியடைந்துள்ளது. வரும் மே மாதம் வரை இந்த விலை வீழ்ச்சி நீடிக்க வாய்ப்புள்ளது. அதன் பின் அறுவடை காலம் குறைய துவங்கியதும் விலை உயர வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

**சாலையோர மரங்களில்புளி அறுவடை தீவிரம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 02,2011,03:20 IST

ஈரோடு: சாலையோர புளிய மரங்களில் புளி அறுவடை தீவிரமாக நடக்கிறது.தமிழகத்தில், நகரம், கிராமப்பகுதிகளில் சாலை நெடுக உள்ள நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான புளிய மரங்களில், ஆண்டுதோறும் புளி சீஸனின் போது, ஒப்பந்ததாரர்கள் மூலம் அறுவடை பணி நடக்கிறது. ஆண்டுதோறும் ஜனவரி மாத இறுதியில் பூக்கள் பழமாகின்றன. சாலையோர புளிய மரங்களில் தற்போது அறுவடைக்கு டெண்டர் விடப்பட்டு, அறுவடை பணி தீவிரமாக நடக்கிறது. தினமும் ஒரு மரத்துக்கு பத்து முதல் 15 கிலோ புளியம்பழம் அறுவடையாகிறது. சாலையோர மரங்களில் மொத்தமாக பல ஆயிரம் புளியமரங்கள் ஒப்பந்ததாரர்களுக்கு டெண்டர் தருவதன் மூலம், மார்க்கெட்டுக்கு அதிகளவு புளி வருகிறது.பெருந்துறை - சென்னிமலை நெடுஞ்சாலையில் உள்ள புளியமரங்களை சேலம் ஓமலூரை சேர்ந்த முருகேஸ் டெண்டர் எடுத்துள்ளார்.

அவர் கூறியதாவது:நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான சாலையோர புளியமரங்களை, ஏழு ஆண்டாக டெண்டர் எடுத்து, புளி அறுவடை செய்து, சேலம் மார்க்கெட்டில் விற்பனை செய்து வருகிறேன். இதுக்கு முன்பு நாமக்கல் மாவட்டத்தில் டெண்டர் எடுத்து பழங்களை பறித்துவிட்டேன். ஈங்கூர் பகுதியில் நூறு மரங்களை 40 ஆயிரம் ரூபாய்க்கு டெண்டர் எடுத்துள்ளேன்.இங்கு பறிக்கப்பட்ட பழத்தை, தோல், கொட்டை எடுத்து, சேலம் செவ்வாய்ப்பேட்டை மார்க்கெட்டில் விற்பனை செய்கிறேன். கிலோ 40 ரூபாய்க்கு மொத்த வியாபாரிகள் வாங்குகின்றனர்.

**வாழையில் ஊடுபயிராககொத்தவரை சாகுபடி**

பதிவு செய்த நாள் : மார்ச் 02,2011,03:11 IST

ஈரோடு:ஈங்கூர் பகுதியில் வாழை பயிருடன் ஊடு பயிராக கொத்தவரங்காய் சாகுபடி நடக்கிறது.ஈங்கூர் பகுதியில் கிணற்றுப் பாசனத்தில், அதிகளவு வாழை, மக்காச்சோளம் போன்ற பயிர்கள் சாகுபடி நடக்கிறது. பத்து மாதப் பயிரான வாழையில் ஊடு பயிராக விவசாயிகள் கொத்தவரங்காய், சிறிய வெங்காயம், கத்தரி போன்ற பயிர்களை சாகுபடி செய்கின்றனர். 90 நாள் பயிரான கொத்தவரங்காயை ஊடுபயிராக அதிகளவு விவசாயிகள் சாகுபடி செய்துள்ளனர்.விதை நடவு செய்த 30வது நாளிலிருந்து காய்ப்பு பருவத்துக்கு வரும் இந்த செடியில், 70 முதல் 90 நாள் வரை ஒரு ஏக்கரில் வாரத்துக்கு 80 முதல் 100 கிலோ வீதம் காய் உற்பத்தியாகிறது. உபரியாக கொத்தவரங்காய் மூலம் கணிசமான வருவாய் கிடைக்கிறது.இது தவிர விவசாயிகள் சிறிய வெங்காயம், கத்தரி போன்ற பயிர்களையும் ஊடுபயிராக சாகுபடி செய்து வருகின்றனர். இருப்பினும், விவசாய தொழிலாளர்களின் கூலி உயர்வால், களை எடுப்பது முதல் அறுவடை வரை அதிக பணம் செலவாவதால், விவசாயிகள் போதிய லாபம் கிடைக்காமல் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஈங்கூர் விவசாயி சுப்பிரமணியன் கூறியதாவது:அரை ஏக்கரில் வாழை பயிரிட்டுள்ளேன். ஊடுபயிராக கொத்தவரங்காய் சாகுபடி செய்துள்ளேன். இப்பயிர் விதை நடவு செய்தது முதல் 30 நாளில் காய்ப்புக்கு வரும். 70 முதல் 90 நாட்கள் வரை வாரம் ஒரு முறை காய் உற்பத்தியிருக்கும்.வீட்டு செலவுக்காக கத்தரி, சிறிய வெங்காயம் பயிர்களும் சாகுபடி செய்துள்ளேன். விவசாயத் தொழிலாளர்களின் கூலி உயர்வால் ஒவ்வொரு முறை களை எடுக்கும் போது 2,000 ரூபாய் வரை செலவாகிறது. இதனால், ஊடு பயிர் சாகுபடி செய்தும் பெரியளவில் லாபமில்லை.இவ்வாறு அவர் கூறினார்.

**தோட்டக்கலை துறை ஒருநாள் பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 02,2011,00:42 IST

லாலாப்பேட்டை: கிருஷ்ணராயபுரம் வட்டார தோட்டக்கலைத்துறை சார்பில் பஞ்சாயத்து தலைவர் மற்றும் விவசாயிகளுக்கு ஒருநாள் பயிற்சி முகாம் மகாதானபுரத்தில் நடந்தது. தென்னை நலவாரியம் மூலம் செயல்படுத்தப்படும் பணிகள், திட்டங்கள், தென்னை நலவாரிய உறுப்பினர்களுக்கான நடைமுறைகளை விவசாயிகளுக்கு தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் ராஜேந்திரன் விளக்கினார். அரசு திட்டம் பற்றி அலுவலர் கீதா பேசினார். பயிர் சாகுபடி முறை, ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறை, அறிவியல் நிலையம் செயல்பாடு குறித்து

சரஸ்வதி வேளாண்மை அறிவியல் நிலைய தோட்டக்கலை தொழில்நுட்ப வல்லுநர் தனசேகர் விளக்கினார்.
சொட்டுநீர் பாசனம் அவசியம் பற்றி காவிரி பாசன சங்க செயல்தலைவர் மகாதானபுரம் ராஜராம் விளக்கி பேசினார். பயிற்சியில் உழவர் மன்ற அமைப்பாளர் ஜெயபால், பஞ்சாயத்து தலைவர்கள் பங்கேற்றனர்.

**சமையல் எண்ணெய்விலை "வழுக்கியது'**

பதிவு செய்த நாள் : மார்ச் 02,2011,01:29 IST

மதுரை:சர்வதேச சந்தையில் சமையல் எண்ணெய் விலை குறைவால், மதுரையிலும் விலை குறைந்துள்ளது.எண்ணெய் வியாபாரிகள் சங்க நிர்வாகி கிருஷ்ணமூர்த்திகூறியதாவது :கடந்த வாரம் 59 ரூபாய்க்கு விற்ற ஒரு லிட்டர் பாமாயில், நேற்று 58 ரூபாய்க்கு விற்க பட்டது. சூரியகாந்தி எண்ணெய் 74 ரூபாயில் இருந்து 73 ரூபாய்க்கும், கடலை எண்ணெய் 75 ரூபாயில் இருந்து 74 ரூபாய்க்கும், வனஸ்பதி 62 ரூபாயில் இருந்து 60 ரூபாய்க்கும், ரைஸ்பிரான்ஆயில் 63 ரூபாயில் இருந்து 60 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. தேங்காய் எண்ணெய் 110ரூபாய், நல்லெண்ணெய் 115 ரூபாய், தும்பை நல்லெண்ணெய் 127 ரூபாய் என்பதில் மாற்றமில்லை, என்றார்.

**மல்லிகை விலை அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : மார்ச் 02,2011,01:30 IST

மதுரை:இன்று சிவராத்திரியை முன்னிட்டு, மதுரையில் அனைத்து பூக்களின் விலையும் அதிகரித்து உள்ளது.மாட்டுத்தாவணி பூ மார்க்கெட் சங்க நிர்வாகி சோ.ராமச்சந்திரன் கூறியதாவது :கடந்த வாரம் கிலோ 150 ரூபாய்க்கும், 120 ரூபாய்க்கும் விற்ற மல்லிகை, நேற்று 220 ரூபாய்க்கு விற்கப்பட்டது. அரளி 120 ரூபாய், செவ்வந்தி 80, சம்பங்கி 120, மரிக்கொழுந்து 25-30, கோழிக்கொண்டை 40-50, வாடாமல்லி 30, கனகாம்பரம் 500, மெட்ராஸ் மல்லி 200 ரூபாய்க்கு விற்கப்பட்டது, என்றார்.

**சீராக அரிசி விலை**

பதிவு செய்த நாள் : மார்ச் 02,2011,01:29 IST

மதுரை:மதுரையில் ஒருமாதமாக அரிசி விலை சீராக இருக்கிறது. நேற்றைய அரிசி விலை குறித்து, அரிசி ஆலை உரிமையாளர் சங்க செயலாளர் சந்திரன் கூறியதாவது :புழுங்கல் அரிசி

பழசு கிலோ ரூ.37.50க்கும், அடுத்தரகம் ரூ.30.50க்கும் விற்கப்படுகிறது. கர்நாடகா பொன்னி ரூ.27க்கும், மதுரை டீலக்ஸ் பொன்னி பழசு ரூ.33க்கும், புதுசு ரூ.24க்கும் விற்கப்படுகிறது. வெள்ளை பொன்னி பழசு ரூ.35, புதுசு ரூ.27, செல்லப்பொன்னி பழசு ரூ.23, புதுசு ரூ.20, ஐ.ஆர்., 20 பழசு ரூ.22.50, புதுசு ரூ.20, ஐ.ஆர். 36 பழசு ரூ.21.50, புதுசு ரூ.19, பச்சரிசி நயம் பழசு ரூ.36.50, புதுசு ரூ.28, மாவு பச்சரிசி ரூ.22.50, புதுசு ரூ.20, பிரியாணி அரிசி நயம் ரூ.52, புதுசு ரூ.44, "ஆப்பாயில்' அரிசி பழசு ரூ.31.50, புதுசு ரூ.23க்கு விற்கப்படுகிறது, என்றார்.மொத்த கடைகளிலும், சில்லரை கடைகளிலும் அரிசி விலை வேறுபடுகிறது.

**நெல்கொள்முதல் கண்காணிப்பு குழு இருந்தும்நடவடிக்கை இல்லை**

பதிவு செய்த நாள் : மார்ச் 02,2011,01:19 IST

மதுரை:மதுரை மாவட்டத்தில் கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டும், கொள்முதல் மையங்களில் நடைபெறும் முறைகேடுகளை களைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றனர்.மதுரை மாவட்டத்தில் அறுவடை பணிகள் துவங்கியதும் நெல் கொள்முதல் மையங்களை அரசு திறந்துவிட்டுள்ளது.மாவட்டம் முழுவதும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் சார்பில் 39 மையங்களும், பாண்டியன் கூட்டுறவு சங்கம் சார்பில் 42 மையங்களுமாக 80க்கும் மேற்பட்ட மையங்கள் செயல்பட்டு வருகின்றன. பிப்., 4ம் தேதி முதல் இதுவரை 35 ஆயிரம் டன்னுக்கும் அதிகமாக கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. வியாபாரிகளிடம்ஆர்வம்: பல மையங்களில் விவசாயிகளிடம் நெல் வாங்குவதைவிட, வியாபாரிகளிடமே நெல் கொள்முதல் செய்யப்படுவதாக புகார் எழுகிறது.

வியாபாரிகள் கிராமப்புறங்களில் ஏற்கனவே கொள்முதல் செய்து இருப்பில் வைத்திருந்த நெல்லையோ, குறைந்தளவு சாகுபடி செய்த விவசாயிகளிடமோ, குறைவான விலைக்கு பெற்று, அவற்றை மையங்களில் கூடுதல் விலைக்கு விற்கின்றனர். மையங்களிலும் அவர்களிடம் நெல்லை கொள்முதல் செய்ய ஆர்வம் காட்டுகின்றனர்.கொள்முதல் மையங்களில் மூடைக்கு ரூ. 20 வரை வசூலிக்கப்படுகிறது. இதில் மூடை தூக்க, கட்டுவதற்கு பணியாற்றும் தொழிலாளிகளுக்கு 5 முதல் 7 ரூபாயும், மீதி அதிகாரிகளுக்கும் மாமூலாக செல்கிறது என விவசாயிகள் புகார் தெரிவிக்கின்றனர். வியாபாரிகள் இந்த தொகையை எவ்வித மறுப்பும் இன்றி கொடுத்துவிடுவதால், அவர்களின் நெல்லையே எடைபோட்டு மூடையாக்குகின்றனர். அதனால் விவசாயிகளை கண்டு கொள்வதில்லை. இதுபோன்ற குறைபாடுகளை களைய கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு, போன் எண்களும் வெளியிடப்பட்டன. குவியும் புகார்கள்: இதையடுத்து சமயநல்லூர், செம்பட்டி, சிந்துபட்டி, அப்பன்திருப்பதி என பல்வேறு பகுதிகளில்

இருந்தும் புகார்கள் சென்றுள்ளன. இதில் விவசாயிகளின் புகார் உண்மை என கண்டறியப்பட்டும் நடவடிக்கை இல்லை. "புகார் தந்தும் நடவடிக்கை எடுக்கவில்லை. நெல் கொள்முதல் மையங்களில் தினமும் ரூ. 2 முதல் 5 லட்சம் அளவிற்கே கொள்முதல் செய்கின்றனர். ஆனால் அதற்கும்கூடுதலாக நெல் வரத்து உள்ளது. எனவே தினமும் ரூ. 10 லட்சம் அளவிற்காவது கொள்முதல் செய்ய வேண்டும். தினமும் காலை முதலே கொள்முதல் பணியை துவக்க வேண்டும். அவ்வாறு செய்தால் கூடுதல் நெல் கொள்முதல் செய்ய முடியும்,' என்றனர்.

**விலைவாசி உயர்வுக்கு ஆன்லைன் வர்த்தகமே காரணம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 02,2011,00:30 IST

கோவில்பட்டி,மார்ச் 2- இந்தியாவில் விலைவாசி உயர்வுக்கு வணிகர்கள் பொருட்களை பதுக்கி வைப்பதாக கூறுவது உண்மையல்ல. மாறாக ஆன்லைன் வர்த்தகமே காரணம் என்று தமிழ்நாடு வணிகர் சங்க பேரமைப்பு மாநில தலைவர் விக்கிரமராஜா கோவில்பட்டியில் பேசினார்.நாட்டின் சில்லரை வர்த்தகத்தில் அன்னிய முதலீட்டை அனுமதிப்பதை தடை செய்ய வலியுறுத்தி தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு சார்பில் சுமார் ஒருகோடி கையெழுத்து இயக்கம் கடந்த பிப்.2ந்தேதி வேலூரில் துவங்கப்பட்டது. தொடர்ந்து பேரமைப்பின் நிர்வாகிகள் தமிழக மாவட்டங்களுக்கு சென்று மற்ற சங்கத்தினரை சந்தித்து வருகின்றனர். இதனடிப்படையில் கோவில்பட்டி தொழில் வர்த்தக சங்கத்திற்கு பேரமைப்பின் மாநில குழுவினர் வந்தனர். இதையடுத்து கோவில்பட்டி தொழில் வர்த்தக சங்க கட்டடத்தில் சங்கத்தின் சிறப்பு கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு சங்க தலைவர் பிரபாகரன் தலைமை வகித்தார்.

பொருளாளர் நெல்லையப்பன் வரவேற்றார். தொடர்ந்து தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு மாநில தலைவர் விக்கிரமராஜா பேசியதாவது, இந்தியாவில் விலைவாசி உயர்வுக்கு வணிகர்கள் பொருட்களை பதுக்கி வைப்பதாக கூறப்படுவது உண்மையல்ல. மாறாக ஆன்லைன் வர்த்தமே காரணம். ஆகவே உணவு பொருட்களை ஆன்லைன் வர்த்தகத்தில் விற்பனை செய்ய தடை விதிக்க வேண்டும். மேலும் சில்லறை வர்த்தகத்தில் அன்னிய முதலீட்டை கொண்டு வரவும் தடைவிதிக்க வேண்டும். இக்கருத்துக்களை வலியுறுத்தி பிரதமருக்கு சுமார் 2 லட்சம் தந்திகள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் சில்லறை வர்த்தகத்தில் அன்னிய முதலீட்டை கொண்டுவர அரசு யோசித்து வருகிறது. அவ்வாறு கொண்டு வரப்பட்டால் நாட்டிலுள்ள சுமார் 7கோடி வணிகர்களும், அவர்களையும் அவர்களது வணிகத்திற்கும் உதவியாக சார்ந்துள்ள 21 பேரும் பாதிக்கப்படுவதுடன், விலைவாசியையும் கட்டுப்படுத்த முடியாது. ஆகவே இவற்றை வலியுறுத்தி கடந்த பிப்.2ந்தேதி வேலூரில் ஒருகோடி கையெழுத்து இயக்கம் துவங்கப்பட்டது. தொடர்ந்து

வரும் மே.28ந்தேதி வணிகர் தினவிழா சென்னை ஒய்எம்சிஏ கல்லூரி மைதானத்தில் நடைபெறுகிறது. அங்கிருந்து ஒருகோடி கையெழுத்தையும் பிரமருக்கு அனுப்படுகிறது. விழாவிற்கு அனைத்து வணிகர்களும் கடைகளுக்கு விடுமுறை அளித்து கலந்து கொள்ள வேண்டும். இதுதவிர கோவில்பட்டி நகராட்சியில் உரிமக்கட்டணங்கள் பலமடங்கு உயர்த்தப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாகம் வர்த்தக சங்க நிர்வாகிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண வேண்டுமென பேரமைப்பின் சார்பில் கேட்டுக் கொள்ளப்படுவதாக மாநில தலைவர் விக்கிரமராஜா பேசினார். இணை செயலாளர் பாபு நன்றி கூறினார். கூட்டத்தில் செயற்குழு உறுப்பினர்கள் ராதாகிருஷ்ணன், சண்முகசுந்தரம், ராஜதுரை, ராஜகோபால், திருப்பதிராஜா, பரமசிவம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**மா தத்துப்பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த வேளாண் அதிகாரி யோசனை**

பதிவு செய்த நாள் : மார்ச் 02,2011,00:29 IST

செய்துங்கநல்லூர் : தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள மா சாகுபடியாளர்களின் கவனத்திற்கு வேளாண் விஞ்ஞானி ஆலோசனை கூறியுள்ளார்.மா தற்போது பூத்து உள்ளதா? மா இலைகள் பகல் வெயிலில் பளபளவென்று எண்ணெய் தேய்த்துவிட்டது போல் மினுமினுப்பாக உள்ளதா? மினுமினுக்கும் இலைகளை தொட்டுப் பாருங்கள், தேன் தெளிக்கப்பட்டது போன்று பிசுபிசுப்பாக உள்ளதா? அப்படி இலைகள் மினுமினுப்புடன், பிசுபிசுப்பாகவும் காணப்பட்டால் இந்த இலைகளுக்கு மேலுள்ள பூங்கொத்துகளை மா தத்துப்பூச்சி தாக்கியுள்ளது. பூங்கொத்துக்களை உற்று நோக்கினால் சிறிய பழுப்பு நிறமுள்ள, பக்கவாட்டில் நகரக்கூடிய தத்துப்பூச்சிகளை காணலாம். மா தத்துப்பூச்சிகள் முட்டைகளை இளங்குருத்துக்கள், பூக்கொத்துகள், இலைகளில் துளைத்து வைக்கின்றன.

இதனால், முட்டை உட்செலுத்தப்பட்ட பகுதிக்கு மேற்பகுதி வாடி கருகிவிடும். மேலும், முட்டையிலிருந்து வெளிவரும் இளம் குஞ்சுகள் மற்றும் முழு வளர்ச்சியடைந்த தத்துப்பூச்சிகள் இலைக்குருத்து மற்றும் பூங்கொத்துகளின் சாற்றினை உறிஞ்சுகின்றன. இதனால் பூங்கொத்துகள் வலுவிழக்கின்றன. தாக்குதல் தீவிரப்பட்டால், பூ மொட்டுகள், பூக்கள், இளம் பிஞ்சுகள் காய்கள் உதிர்கின்றன. மேலும் இப்பூச்சிகள் வெளியேற்றும் தேன்பாகு போன்ற கழிவுகள் இலைகளின் மீது படிந்து கரும்பூசணம் வளர்ந்து ஒளிச்சேர்க்கை பாதிக்கப்படுகிறது. நெருக்கி நடப்பட்ட தோப்புகளில் சேதம் விரைந்து பரவும். மல்கோவா, நீலம், செந்தூரம் போன்ற ரகங்கள் பெரும் பாதிப்புக்குள்ளவாதுண்டு. பெங்களூரா மற்றும் சப்பட்டை எனப்படும் பங்கனப்பள்ளி அல்லது

பனேசன் ரகங்களில் தாக்குதல் சற்று குறைந்து காணப்படும். மா நடவு செய்யும் போதே சிபாரிசு செய்யப்படும் இடைவெளியில் மரங்களை நட வேண்டும்.

முடிந்தவரை பாதிப்புக்குள்ளான பூங்கொத்துகளை கவாத்து செய்து அகற்றி எரித்து அழிக்க வேண்டும். காய்ந்த சருகுகளை தீயிட்டு புகைமூட்டம் செய்து தாக்குதலை ஓரளவு குறைக்கலாம். ஒரு லிட்டர் தண்ணீருக்கு ஒன்றரை மில்லி பாசலோன் அல்லது ஒரு கிராம் அசிப்பேட் கலந்து இலைகள், பூங்கொத்துகள், தண்டுகளில் ராக்கர் தெளிப்பான் மூலம் தெளித்துக் கட்டுப்படுத்தலாம். மாலை நேரத்தில் தெளிப்பது நல்ல பலன் தரும். தேவைப்பட்டால் பத்துநாட்கள் கழித்து மறுமுறை தெளிக்கலாம். மருந்து கரைசல் இலைகளில் நன்கு படிவதற்காக, சாண்டோவிட், இன்ட்ரான் போன்ற திரவ சோப்புகளில் ஏதேனும் ஒன்றினை ஒரு லிட்டர் மருந்து கரைசலுக்கு அரை மில்லி வீதம் சேர்த்து கலக்கிக் கொள்ள வேண்டும். இவ்வாறு ஸ்ரீவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் முருகேசன் தனது செய்திகுறிப்பில் தெரிவித்துள்ளார்.

**பன்னீர் கொய்யா விற்பனை ஜோர்**

பதிவு செய்த நாள் : மார்ச் 02,2011,02:22 IST

தென்காசி : தென்காசி பகுதியில் விற்பனைக்கு பன்னீர் கொய்யா பழம் வரத்து அதிகரித்துள்ளது. கோடை வெயிலில் இருந்து தப்பிக்க பொதுமக்கள் குளிர் பானங்கள் அருந்துவதும், குளிர்ச்சி தரும் பழங்களை வாங்கி சாப்பிடுவதும் உண்டு. இதனால் கோடை காலத்தில் குளிர் பானங்கள் விற்பனை அதிகமாக இருக்கும். அதே போல் குளிர்ச்சி தரும் இளநீர், நுங்கு, பன்னீர் கொய்யா, தர்பூசணி விற்பனையும் அதிகமாக இருக்கும். தென்காசி, செங்கோட்டை மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் இளநீர், நுங்கு விற்பனை அமோகமாக இருக்கிறது. இதே போன்று தற்போது பன்னீர் கொய்யா பழம் விற்பனையும் அதிகரித்துள்ளது. ஒரு கிலோ பன்னீர் கொய்யா 30 ரூபாய் முதல் 50 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. இதனை மக்கள் அதிகளவில் வாங்கி செல்கின்றனர்.

**உளுந்து, துவரம் பருப்பு விலை குறையும்**

பதிவு செய்த நாள் : மார்ச் 02,2011,01:14 IST

மதுரை:தமிழகத்தில் கடந்தாண்டு கடும் மழையால் உற்பத்தி பாதித்து, அனைத்து வகை பருப்புகளும் விலை உயர்ந்தன. வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யவேண்டிய கட்டாயம்

ஏற்பட்டது. இந்தாண்டு இதுபோன்று பிரச்னைகள் ஏற்படாமல் இருக்க தூத்துக்குடி, தஞ்சை உட்பட 8 மாவட்டங்களில் உளுந்து, துவரம் பயிறு உற்பத்தி செய்ய மாநில அரசு 7 கோடி ரூபாயும், மத்திய அரசு 2.7 கோடி ரூபாயும் வழங்கியுள்ளது. இதில் வேலூரில் மட்டும் துவரம் பயறு உற்பத்தி செய்யப்படும். தற்போது ஒரு எக்டேருக்கு 381 கிலோ உற்பத்தி செய்யப்படுகிறது. இதை 670 கிலோவாக அதிகரிக்கவே இந்த நடவடிக்கை. "அரசின் இந்த நடவடிக்கையால், வரும் காலங்களில் பருப்பு விலை குறையும்," என்கிறார் மதுரை பருப்பு வியாபாரிசங்க செயலாளர் வெற்றிச்செல்வன்.

**மருந்து தெளிப்பால் பாதிப்புவிவசாயிகளுக்கு நஷ்டஈடு**

பதிவு செய்த நாள் : மார்ச் 01,2011,22:45 IST

திண்டுக்கல்:ஒட்டன்சத்திரம் பகுதியில் மக்காசோளத்திற்கு பூச்சி மருந்து அடித்ததில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.ஒட்டன்சத்திரம் பகுதியில் மக்காசோளத்தில் பூச்சிக்கள் தாக்காமல் இருப்பதற்காக விவசாயிகள் ஐதராபாத் நிறுவனத்தை சேர்ந்த ஒரு பூச்சி மருந்தை அடித்தனர். இதனால் மக்காசோள செடிகள் பாதிக்கப்பட்டன. இதையடுத்து எழுந்த புகாரை விசாரித்து நடவடிக்கை எடுக்க கலெக்டரால் உதவி இயக்குனர் மனோகரன் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. இக்குழுவினர் கூறகையில்,"ஒட்டன்சத்திரம் பகுதியில் ஐதராபாத்தை சேர்ந்த தனியார் நிறுவனம் பூச்சி மருந்தை அளித்துள்ளது. இதை தெளித்த 15 விவசாயிகளின் தோட்டங்களில் மக்காசோளம் பாதிக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்கப்படும். மருந்து தடை செய்யப்படும். பூச்சி மருந்து கம்பெனி மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது,'என்றனர்.

**கோடை சாகுபடிக்கு மானியவிலையில் இடுபொருட்கள்**

பதிவு செய்த நாள் : மார்ச் 01,2011,23:17 IST

சிவகாசி:சிவகாசி தாலுகாவில் கோடை சாகுபடிக்கு ஏற்ற பருத்தி ரகமான எஸ்.வி.பி.ஆர். 2 விதை, வேளாண் விரிவாக்க மையத்தில் தேவையான அளவிற்கு இருப்பு உள்ளது. விவசாயிகள் கோடை பருத்தி சாகுபடி செய்து நல்ல மகசூல் பெறலாம். தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் 50 சதவீத மானிய விலையில் ஜிப்சம், பாசிப்பயறு வழங்கப்படும். தேவையான விவசாயிகள் விரிவாக்க மையத்தை தொடர்பு கொண்டு பயன் பெறலாம்.

**கோடை நெல் நடவுப்பணியில் விவசாயிகள் மும்முரம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 01,2011,23:19 IST

வத்திராயிருப்பு:பருவமழையால் நெல் சாகுபடி தாமதமடைந்ததாலும், தற்போது கண்மாய்களில் குறைந்த நீரே இருப்பு உள்ளதாலும் விவசாயிகள் கோடை நெல் நடவுப்பணிகளில் அவசரம் காட்டி வருகின்றனர். இதன் காரணமாக மாவட்டம் முழுவதும் நடவுப் பணிகள் மும்முரம் அடைந்துள்ளது.ராஜபாளையம், சேத்தூர், தேவதானம், தளவாய்புரம், ஸ்ரீவில்லிபுத்தூர், வத்திராயிருப்பு உட்பட மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளையொட்டி 30 ஆயிரம் ஏக்கருக்கு மேல், நெல் விவசாயம் நடந்து வருகிறது. பருவமழை தாமதத்தால் காலமுறை சாகுபடி இரண்டு மாதம் தாமதமடைந்தது. இதனால் நடவுப்பணிகள் நடக்கவேண்டிய நேரத்தில்இன்னும் ஒருசில பகுதிகளில் அறுவடை பணிகள் நடந்து வருகிறது.இந்த தாமதத்தை போக்கவும், தற்போது கண்மாய்களில் குறைந்த அளவு நீரே இருப்பு உள்ளதால் அதை உடனடியாக பயன்படுத்தி கோடை நெல் நடவை முடிப்பதற்காகவும் விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர்.அவசரம்: வழக்கமாக அறுவடைக்குப் பின் நிலத்தை குறைந்தது ஒருமாதமாவது ஆறப்போட்டு அதன் பிறகே நடவுப் பணிகளை துவக்குவர்.

ஆனால் நீர்நிலைகளில் குறைந்த நீர் இருப்பால், அறுவடை முடிந்த கையோடு உழவு, நடவுப் பணிகளையும் மேற்கொண்டு வருகின்றனர். இதனால் மாவட்டம் முழுவதும் கோடை நடவுப் பணிகள் மும்முரம் அடைந்துள்ளது. ஒரு சில இடங்களில் காலஅறுவடை, கோடைநடவு நடந்து வருகிறது.அறுவடை முடிவதற்குள் அருகில் உள்ள விவசாயிகள், நிலங்களில் நீர்பாய்ச்சி உழத்துவங்கியதால் அறுவடை செய்ய வேண்டிய நிலங்களுக்கு அறுவடை இயந்திரங்கள் செல்லமுடியவில்லை. இதனால் அங்குள்ள விவசாயிகள் கையால் அறுவடை செய்யவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.நடவு செய்த விவசாயிகள் குறைந்த நீர் இருப்பால் கவலையில் உள்ளனர்.

**காய்கறி விலை விபரம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 01,2011,23:16 IST

விருதுநகர்:விருதுநகர் மார்க்கெட்டில் கிலோ பட்டர் பீன்ஸ் 120 ரூபாய், முருங்கைக்காய், மங்காய் தலா 60, தக்காளி, சுரைக்காய் தலா 8, கத்தரிக்காய், பச்சை பீன்ஸ், கறிவேப்பிலை, இஞ்சி தலா 40, அவரைக்காய், முள்ளங்கி, உருளை கிழங்கு, சவ்சவ், பச்சை மிளகாய், பல்லாரி, பீட்ரூட் தலா 20 ரூபாய். வெண்டக்காய், புடலங்காய், மல்லி தழை, முட்டை கோஸ் தலா 16, காரட்,

பீர்க்கங்காய், சீனிவரைக்காய், காலி பிளவர் தலா 24, டர்னிப், நுக்கல் தலா 25, பட்டாணி, பாகற்காய், எலுமிச்சம் பழம் தலா 50, சிவப்பு பீன்ஸ் 70, வெங்காயம் 30, சேனை 32, சேம்பு 36, மொச்சைக்காய் 36 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. பூக்கள்: கிலோ மல்லிகை, பிச்சி பூ தலா 150 ரூபாய், கனகாம்பரம் 200, மெட்ராஸ் மல்லி 120, செவ்வந்தி 60, கேந்தி பூ 30, மரிக்கொழுந்து 20, அரளி பூ 70 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

**தேங்காய் வரத்து அமோகம் விலை வீழ்ச்சி**

பதிவு செய்த நாள் : மார்ச் 01,2011,23:45 IST

சிவகங்கை:கேரளா, ஆந்திரா உட்பட ஏழு மாநிலங்களில் இருந்து தேங்காய் வரத்து அதிகரித்ததால், விலை குறைந்துள்ளது.சமீபத்திய பருவமழையால் தேங்காய் உற்பத்தி குறைந்து, விலை அதிகரித்தது. இதனால், கடந்த மாதம் வரை குவின்டால், 1,125 முதல் 1,350 ரூபாய் வரை விற்றது.தற்போது கேரளா, கர்நாடகா, ஆந்திரா, ஒடிசா, மேற்கு வங்கம், புதுச்சேரி, கோவாவில் இருந்து தேங்காய் வரத்து அதிகரித்துள்ளது. இதனால், குவின்டால் 1,050 முதல் 1,275 ரூபாய் வரை விற்கிறது.
விவசாயத்துறையினர் கூறுகையில், "தேங்காய் வரத்து அதிகரித்துள்ளது. ஆனால் தேவை குறைந்து, விலையும் சரிந்துள்ளது. ஜனவரியில் 15 ரூபாய்க்கு விற்ற நடுத்தர காய், தற்போது 8 ரூபாய்க்கு கிடைக்கிறது. இன்னும் குறையும்,' என்றனர்.

**அறுவடை பணிக்கு ஆட்கள் பற்றாக்குறை : விவசாயிகள் கடும் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : மார்ச் 01,2011,21:27 IST

சேத்தியாத்தோப்பு : நெல் அறுவடை மற்றும் கரும்பு வெட்ட தொழிலாளர் பற்றாக்குறை காரணமாக விவசாய பணிகள் கடும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளது. நாட்டின் முதுகெலும்பான விவசாயம் முழுக்க, முழுக்க தொழிலாளர்களை மட்டுமே நம்பியுள்ளது. என்னதான் நவீன ரக இயந்திரங்கள், தொழில் நுட்பங்கள் வேளாண் துறையில் பயன்படுத்தப்பட்டாலும் தொழிலாளர்கள் இல்லாமல் விவசாயம் இல்லை என்பது தான் உண்மை. இந்நிலையில் இந்த ஆண்டு சம்பா பருவ அறுவடை, கரும்பு வெட்டும் பணி ஆகியவற்றிற்கு தொழிலாளர் பற்றாக்குறை காரணமாக அறுவடை பணிகள் பாதிப்பிற்குள்ளானது. கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு வரை 80 ரூபாய் முதல் 100 ரூபாய் வரை சம்பளம் பெற்று வந்த விவசாய தொழிலாளர்களை தற்போது வேலைக்கு அழைத்தால் அவர்கள் விதிக்கும் நிபந்தனைகள்

விவசாயிகளை திக்கு முக்காட வைக்கிறது. நாள் ஒன்றுக்கு 150 ரூபாய் முதல் 250 ரூபாய் வரை சம்பளம், காலை 11 மணிக்கு 2 பன்னுடன் டீ, மதியம் 3 மணிக்கு 2 வடை, 2 பஜ்ஜி, 2 போன்டா இவற்றில் ஏதாவது ஒன்றும் டீயும் அவசியம் வாங்கித் தர வேண்டும். இதைவிட முக்கியமாக சம்பளத்தை வேண்டுமானாலும் மறுதினம் கொடுக்கலாம். அவசியமாக 70 ரூபாய் மதிப்புள்ள குவாட்டர் பாட்டில் கண்டிப்பாக வாங்கித்தர வேண்டும். குடிப்பழக்கம் அல்லாதவருக்கும் குவாட்டர் பாட்டில் கொடுத்துவிட வேண்டும். அவர் வேண்டுமானால் சக தொழிலாளியிடம் கொடுத்து பணம் பெற்றுக் கொள்ளலாம். தவிர குவாட்டருக்கு உரிய பணத்தை கொடுக்கும் உரிமை விவசாயிக்கு இல்லை. இந்த நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டாலும் கூட ஆட்களை ஒன்று சேர்க்க குறைந்தபட்சம் மூன்று நாட்களாவது ஆகும். கிடைக்கும் தொழிலாளர்களை தக்க வைக்க தங்கள் சுயமரியாதையை இழந்து டாஸ்மாக் கடைக்குச் சென்று பாட்டில் வாங்க வேண்டியுள்ளது என குடிப்பழக்கம் இல்லாத விவசாயிகள் குமுறுகின்றனர்.

இந்த அவல நிலைக்கு வேலை உறுதியளிப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது தான் காரணம் என்கின்றனர் விவசாயிகள். காலை 8 மணிக்கு சென்று கைரேகை வைத்து விட்டு பெயரளவிற்கு வேலை செய்ததாக கணக்கு காட்டி வீட்டிற்கு வந்து விட்டால் ஊராட்சி எழுத்தர் மூலம் 100 ரூபாய் வீடு தேடி வரும்போது வயல் வெளியில் வாட்டத்துடன் யார்தான் வேலை செய்ய முன்வருவார்கள் என விவசாய தொழிலாளர்களே கூறுகின்றனர். ஏழை மக்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டும் என்பதற்காக மத்திய அரசு கொண்டு வந்த வேலை உறுதியளிப்பு திட்டம் உழைக்கும் மக்களை உற்சாகப்படுத்துவதற்கு பதிலாக அத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் முறையற்ற போக்கால் விவசாய தொழிலாளர்களை சோம்பேறிகளாக்கி வருகிறது. இந்த நிலையை மாற்றிட அண்டை மாநிலமான கேரளாவில் உள்ளதுபோல், வேலை உறுதியளிப்பு திட்டத்தில் பதிவு செய்த தொழிலாளர்களை விவசாய தொழிலிலும் ஈடுபடுத்த முன்னுரிமை அளிக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது ஒட்டு மொத்த விவசாயிகளின் எதிர்பார்ப்பாக உள்ளது.

**கொத்தமல்லி சாகுபடி குறைவு: கொள்முதல் விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : மார்ச் 01,2011,22:43 IST

உடுமலை : வெளிமாநில வரத்து, தமிழகத்தில் சாகுபடி பரப்பு குறைந்ததால் கொத்தமல்லியின் கொள்முதல் விலை கிடு.. கிடுவென உயர்ந்து வருகிறது.உடுமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில், மானவாரியாக கொத்தமல்லி பயிரிடப்படுகிறது. 40 கிலோ மூட்டை ரூ.1,300 கொள்முதல் செய்யப்பட்டது. இதனால், பல விவசாயிகள் நஷ்டமடைந்தனர்.இப்பிரச்னையால் இந்தாண்டு

சீசனில் கொத்தமல்லி பயிரிட விவசாயிகள் ஆர்வம் காட்டவில்லை. அந்தியூர், பண்ணைக்கிணறு, ராகல்பாவி உட்பட பகுதிகளில் மட்டும் பரவலாக கொத்தமல்லி பயிரிடப்பட்டது.

கடந்த சில நாட்களாக கொத்தமல்லி அறுவடை பணிகள் துவங்கி தீவிரமடைந்துள்ளது. டிச., மாதத்தில் கொத்தமல்லியின் விலை சிறிது அதிகரித்து மூட்டை ரூ. 1,700 கொள்முதல் செய்யப்பட்டு வந்தது. அறுவடை துவங்கியதும் வழக்கத்திற்கு மாறாக கொத்தமல்லியின் விலை கிடு.. கிடு வென உயர்ந்து வருகிறது. நேற்றைய நிலவரப்படி உடுமலை பகுதியில் 40 கிலோ கொத்தமல்லி மூட்டை 2 ஆயிரத்து 400 ரூபாயிலிருந்து 2 ஆயிரத்து 600 ரூபாய் வரை கொள்முதல் செய்யப்பட்டது.

வழக்கமாக ஜன., மாதத்திலிருந்து ராஜஸ்தான் உட்பட வடமாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்கு கொத்தமல்லி வரத்து சீராக இருக்கும். இந்தாண்டு இதுவரை வெளிமாநில வரத்து அதிகரிக்கவில்லை.தமிழ்நாட்டிலும் சாகுபடி பரப்பு வெகுவாக குறைந்துள்ளது. வடகிழக்கு பருவமழையினால் சாகுபடி செய்யப்பட்ட பகுதிகளிலும் விளைச்சல் பாதித்துள்ளது. சீசன் துவக்கத்தில் மட்டும் உடுமலை ஒழுங்கு முறை விற்பனை கூடத்திற்கு 10 ஆயிரம் மூட்டை கொத்தமல்லி இருப்பு மற்றும் விற்பனை செய்ய வரத்து இருக்கும். இந்தாண்டு 3 ஆயிரம் மூட்டை மட்டுமே வரத்துள்ளது. மசாலா நிறுவனங்களும் தங்களுக்கு தேவையான கொத்தமல்லியை வாங்கி இருப்பு வைத்து கொள்ள ஆர்வம் காட்டுகின்றன. இதனால், இந்தாண்டு கொத்தமல்லி பயிரிட்ட விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைத்து வருகிறது.

**"ஆரோக்கிய மகசூலுக்கு இயற்கை விவசாயம்'**

பதிவு செய்த நாள் : மார்ச் 01,2011,22:38 IST

வெள்ளகோவில் : தமிழ்நாடு நீர்வள நிலவள திட்டத்தில், பி.ஏ.பி., பாசன விவசாயிகளுக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நிலைத்த வேளாண்மை குறித்த பயிற்சி முகாம், வெள்ளகோவிலில் நேற்று நடந்தது. கோவை நீர்வள ஆதாரத்துறை உதவி செயற்பொறியாளர் இளங்கோவன் தலைமை வகித்தார். உதவி பொறியாளர் செந்தில் குமரன், அக்கறை அறக்கட்டளை இயக்குனர் பிருதிவிராஜ் முன்னிலை வகித்தனர்.பசுமை அறக்கட்டளை தலைவர் யோகநாதன் பேசியதாவது:இயற்கை விவசாயத்தை விடுத்து, ரசாயன உரங்களை பயன்படுத்துவதால் மண் வளம் குன்றி வருகிறது. மண் மலட்டு தன்மை ஏற்பட்டு, எதிர்பார்த்த அளவு மகசூல் பெற முடிவதில்லை. இயற்கை விவசாயம் குறித்து தெரிந்துகொண்டு, விவசாயிகள் படிப்படியாக இயற்கை விவசாயத்துக்கு மாறுவது அவசியம்.

மண்ணை வளப்படுத்த, பல தானிய பயிர் முறை சிறந்ததாக உள்ளது. சணப்பை, ஆமணக்கு, நிலக் கடலை, பயறு வகைகளை ஏக்கருக்கு 25 கிலோ விதைக்க வேண்டும். பூக்கும் பருவத்தில், பூவோடு சேர்த்து நிலத்தை உழும்போது, நல்ல உரமாவதுடன் மண் வளமும் பெருகுகிறது.

ஒரு மூட்டை யூரியா உரத்தில் உள்ள சத்து, ஒரு லிட்டர் மாட்டு ஹோமியத்தில் அடங்கியுள்ளது. ரசாயன உரங்களால் சுற்றுச்சூழல் மாசு ஏற்படுவதோடு, விளைநிலங்களுக்கும், மனிதருக்கும் தீமைகளே விளைகின்றன.இறந்த பசுமாட்டின் கொம்புகளை அகற்றி, வெயிலில் உலர வைக்க வேண்டும். இரண்டு நாள் கழித்து கொம்பை தட்டினால், சதைப்பகுதி வெளியே வந்து விடும். கொம்பினுள் மாட்டு சாணத்தை அடைத்து, ஈரப்பதம் இல்லாத இடத்தில் மண்ணினுள் வைத்து விட வேண்டும். நான்கு மாதங்களுக்கு பின், அதை எடுத்தால், சிறந்த மண் வள ஊக்கி கிடைக்கிறது. ஏக்கருக்கு 30 கிராம் ஊக்கியை தண்ணீரில் கலந்து தெளித்தால், நிலத்தில் மண்புழு உற்பத்தி அதிகமாகிறது. அடியிலிருக்கும் மண்புழுக்கள் மேலே வந்து, மண் வளம் பெறுகிறது. இயற்கை முறையில் விவசாயம் செய்யும்போது, சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுவதோடு, ஆரோக்கியமான மகசூல் பெறமுடியும்.இவ்வாறு, யோகநாதன் பேசினார்.

**பச்சை புல்லுக்கு செம்மண்**

பதிவு செய்த நாள் : மார்ச் 01,2011,22:20 IST

ஊட்டி : ஊட்டி தாவரவியல் பூங்காவை,கோடை சீசனுக்கு தயார் படுத்தும் நடவடிக்கையில், செம்மண் கொட்டி முகப்பு புல்தரை சீரமைக்கப்படுகிறது.நீலகிரி மாவட்டத்தில் உள்ள சுற்றுலா மையங்களை தயார் படுத்தும் பணிகள் நடந்து வருகின்றன. தாவரவியல் பூங்கா, ரோஜா பூங்கா, படகு இல்லம் ஆகியவற்றில் வண்ண மயமான மலர்களை மலர வைக்கவும், புல்தரைகளை பசுமையாக்கும் பணிகளும் நடக்கிறது. இதில், ஊட்டி தாவரவியல் பூங்காவில் 250க்கும் மேற்பட்ட ரகங்களுடன், 2 லட்சம் மலர் நாற்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளன. பூங்காவின் முகப்பு புல்தரையில் செம்மண் கொட்டி சீரமைக்கும் பணி நடக்கிறது. பணிகள் முடிந்தவுடன், உரமிட்டு புற்கள் தயார்படுத்தப்படும். ஏப்ரல், மே மாதம் நடக்கும் கோடை சீசனின் போது, புல்தரை பசுமையுடன் காட்சி தரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கோடை மழையால் மலர்ந்த காபி பூக்கள்:"ரோபஸ்டா' ரகத்துக்கு நல்ல விலை நிச்சயம்

பதிவு செய்த நாள் : மார்ச் 01,2011,22:22 IST

கூடலூர் : "கூடலூர் பகுதியில் சமீபத்தில் பெய்த கோடை மழையை தொடர்ந்து மலர்ந்துள்ள காபி பூக்களினால் நல்ல விளைச்சல் கிடைக்கும்,' என காபி ஆய்வாளர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். கூடலூர் பகுதியில் விவசாயிகள் தேயிலைக்கு அடுத்தப்படியாக அதிகளவில் காபி பயிரிட்டுள்ளனர். இப்பகுதியில் பெரிதும், சிறிதுமாக ஆயிரக்கணக்கான காபி எஸ்டேட்டுகள் உள்ளன. மொத்தம் 5,600 எக்டர் பரப்பளவில் காபி பயிரிட்டுள்ளனர். இதில் ரோபஸ்டா காபி 3,800 எக்டரும், அரபிகா காபி 1,800 பரப்பளவிலும் பயிரிட்டுள்ளனர். ரோபஸ்டா காபி பிப்ரவரி இரண்டாவது வாரத்துக்கு பின்னும், அரபிக்காக காபி ஏப்ரல் மே மாத்திலும் பூ பூக்கும். அப்போது கோடை மழை பெய்தால் நல்ல மகசூல் கிடைக்கும். இந்த ஆண்டு கூடலூர் பகுதியில் கடந்த வாரம் பெய்த கோடை மழையை தொடர்ந்து, தற்போது காபி செடிகளில் பூக்கள் மலர துவங்கியுள்ளன. வெள்ளை நிறத்தில் அழகாய் காணப்படும் காபி பூக்களை நாடி தேனீக்கள் அதிகளவில் வர துவங்கியுள்ளன. இதனால், மறுபுறம் மகரந்த சேர்க்கையும் நடந்து வருகிறது. "மழையால் ரோபஸ்டா ரக காபி செடிகளில நல்ல மகசூல் கிடைக்கும். காபி பூ பூக்கும் 10 நாட்கள் வரை பூக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் விவசாயிகள் காபி தோட்டத்தில் எந்த வேலையும் செய்ய கூடாது. இந்த ஆண்டு சரியான நேரத்தில் கோடை மழை பெய்ததை தொடர்ந்து, காபிக்கு நல்ல விளைச்சல் மட்டுமின்றி நல்ல விலையும் கிடைக்கும். இந்த கோடை மழை அரபிக்கா காபிக்கு மகசூல் பாதிப்பை ஏற்படுத்தும்; ஏப்ரல், மே மாதம் மழை பெய்தால் அரபிக்கா காபிக்கு நல்லது,' என கூடலூரில் உள்ள காபி ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

## தேனீ வளர்ப்பது எப்படி? கோவை வேளாண்மை பல்கலைக்கழகத்தில் பயிற்சி

*கோவை, மார்ச்.2–*

*கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் தேனீ வளர்ப்பு பயிற்சி வருகிற 7–ந் தேதி நடக்கிறது. இதில் தேனீக் கூட்டங்களை கண்டுபிடித்து வளர்க்கும் முறை, சேர்த்து வளர்க்கும் முறை, ராணீத் தேனீ உற்பத்தி, இயற்கை எதிரிகள் நிர்வாகம் ஆகியவை குறித்து பயிற்சி வழங்கப்படும். பயிற்சியில் கலந்து கொள்ள ஆர்வம் உள்ளவர்கள் பயிற்சி நாள் அன்று காலை 9 மணிக்குள்ளாக பூச்சியியல் துறைக்கு தங்கள் சொந்த செலவில் வர வேண்டும். இதற்கு கட்டணமாக ரூ.150 பயிற்சி நாளன்று நேரடியாக செலுத்த வேண்டும். பயிற்சி காலை 10 மணிக்கு தொடங்கி மாலை 5 மணி வரை நடைபெறும். முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.*

*இது குறித்து மேலும் விவரங்களை பெற விரும்புவோர் பேராசிரியர் மற்றும் தலைவர், பூச்சியியல் துறை, வேளாண் பல்கலைக்கழகம், கோவை என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது 0422–6611214 என்ற தொலை பேசி எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம். இந்த தகவலை வேளாண் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டு உள்ளது.*